


# கோவிட்-19 தடுப்பூசிகள் - 5 முதல் 11 வயதான சிறுவர்கள்

**மே 12, 2022**

## சிறுவர்களும் கோவிட்-19 உம்

கோவிட்-19 நுரையீரலைப் பிரதானமாகப் பாதிக்கக் கூடிய ஒரு வைரஸ் தொற்றாகும். கோவிட்-19 தொற்றைக் கொண்ட பெரும்பாலான சிறுவர்கள் இலேசான அறிகுறிகளையே கொண்டிருப்பார்கள். சில சிறுவர்கள் அதிகளவில் நோய்வாய்ப்படுவதுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கவேண்டிய தேவை ஏற்படும் அல்லது களைப்படைதல், சுவாசிப்பதில் சிரமம், கவனம் செலுத்துவதில் சிரமம் அல்லது தசை வலி உட்பட்ட நீண்ட நாள் இருக்கக்கூடிய அறிகுறிகளைக் கொண்டிருப்பார்கள்.

சிறுவர்களுக்குத் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் கோவிட்-19இன் உருமாறிய திரிபுகளிலிருந்து அவர்கள் அதிகளவில் நோய்வாய்ப்படாமல் பாதுகாக்க முடியும். எவ்வளவு அதிகளவில் சிறுவர்களுக்குத் தடுப்பூசி போடப்படுகின்றதோ, அந்த அளவிற்குப் பாடசாலைகள், விளையாட்டுக்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் பாதுகாப்பானவையாக அமையும்.

## சிறுவர்களுக்கான கோவிட்-19 தடுப்பூசிகள்

தடுப்பூசியைப் பெறும்போது சிறுவர்கள் 5 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும். குழந்தைகளுக்கான ஃபைஸர்-பயோற்ரெக் (Pediatric Pfizer-BioNTech) (5 முதல் 11 வயதானவர்களுக்கு) மற்றும் மொடேர்னா ஸ்பைக்வக்ஸ் (Moderna Spikevax) (6 முதல் 11 வயதானவர்களுக்கு) ஆகியன கனேடிய சுகாதாரப் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள mRNA தடுப்பூசிகளாகும்.

### சிறுவர்களு**க்**கான **mRNA** தடுப்பூசிகள்**:**

- ஒவ்வாமை, ஆஸ்த்துமா, சர்க்கரை நோய் அல்லது பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி போன்ற உடல்நிலையைக் கொண்ட சிறுவர்களுக்கும் பாதுகாப்பானதும் பயனுள்ளதுமாகும்.
- உலகளாவிய ரீதியில் பல மில்லியன் கொள்ளளவுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், மிகவும் கவனமாக அவதானிக்கப்படுகின்றது.
  - 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்குவதை விட சற்றுக் குறைவான அளவு

இந்த வயதுப் பிரிவினருக்கு குழந்தைகளுக்கான ஃபைசர்-பயோற்ரெக் (Pfizer-BioNTech) தடுப்பூசி தகுந்தது. பலவீனமான நோய் எதிர்ப்பு அமைப்பைக் கொண்ட குழந்தையொன்றிற்கு மொடேர்னா தடுப்பூசியை வழங்க முடியும்.

## தடுப்பூசி எவ்வாறு செயற்படுகின்றது

- எம்ஆர்என்ஏ (mRNA) தடுப்பூசிகள் - கோவிட்19 இலிருந்து எம்மைப் பாதுகாக்கும் பிறபொருள் எதிரிகளை (antibodies) எப்படி உருவாக்குவது என்பதை எமது நோய் எதிர்ப்பு அமைப்பிற்குக் கற்றுக்கொடுக்கும்.
- இந்தத் தடுப்பூசிகள் கோவிட்19 வைரசைக் கொண்டிருக்கவில்லை. எனவே உங்களது பிள்ளை இந்தத் தடுப்பூசிகள் மூலம் தொற்றைப் பெற முடியாது.
- ஒவ்வொரு தடுப்பூசியையும் பெற்று குறைந்தது இரண்டு வாரங்களின் பின்னரே அதற்கான பாதுகாப்பைப் பெற முடியும்.
- முழுமையான பாதுகாப்பைப் பெறுவதற்கு இரண்டு தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன. பலவீனமான நோய் எதிர்ப்பு அமைப்பைக் கொண்ட சிறுவர்கள் மூன்று தடுப்பூசிகளைப் பெறவேண்டும்.
- ஒவ்வொரு தடுப்பூசிக்கும் இடையில் எட்டு வாரங்கள் இடைவெளி பரிந்துரைக்கப்படுகின்றது.

## தடுப்பூசியின் உள்ளீட்டுப் பொருட்கள் மற்றும் ஒவ்வாமைகள்

எம்ஆர்என்ஏ (mRNA) தடுப்பூசிகள் - கொழுப்புகள், உப்புகள், சர்க்கரைகள் மற்றும் இடையங்களைக் (buffers) கொண்டுள்ளன. இவை முட்டை, ஜெலற்றின் (பன்றிக் கொழுப்பு), பசையம் (gluten), இரப்பர் மரப்பால் (latex), காப்புப் பொருட்கள் (preservatives), நுண்ணுயிர் எதிர்ப்பிகள் (antibiotics) அல்லது அலுமினியம் என்பவற்றைக் கொண்டிருக்கவில்லை. உணவு, மருந்து, மற்றும் சுற்றுச்சூழல் ஒவ்வாமைகளைக் கொண்டுள்ள சிறுவர்களுக்கும் இந்தத் தடுப்பூசிகள் பாதுகாப்பானவை. உங்களது பிள்ளை polyethylene glycol (PEG) ஒவ்வாமையைக் கொண்டிருந்தால், மருத்துவ சேவை வழங்குனர் ஒருவரிடம் கலந்தாலோசியுங்கள். தீவிர எதிர்வினைகள் (anaphylaxis) உட்பட ஒவ்வாமை எதிர்வினைகள் அரிதானவை. ஒவ்வாமை எதிர்வினைகளுக்கு சிகிச்சை அளிக்க முடியும் என்பதுடன், அவை தற்காலிகமானவை. உங்களது பிள்ளை சுவாசிப்பதற்கு சிரமப்பட்டாலோ, முகம் அல்லது தொண்டையில் படர் (hive) அல்லது வீக்கம் ஏற்பட்டாலோ மருத்துவ உதவியை நாடுங்கள்.

## பக்க விளைவுகள் மற்றும் அபாயங்கள்

சிறுவர்களுக்கு ஏற்படும் பக்க விளைவுகள், இளையோர் மற்றும் வயது வந்தவர்களுக்கு ஏற்படும் பக்க விளைவுகளை ஒத்தவை. பெரும்பாலும் அவை மிதமானவை என்பதுடன், ஒன்று முதல் மூன்று நாட்கள் வரை நீடிக்கும். பக்க விளைவுகள் ஏற்படுவது, பொதுவாக தடுப்பூசி வேலை செய்கின்றது என்பதாக அர்த்தப்படும்.

பொதுவான பக்க விளைவுகளில் உள்ளடங்குபவை:

- தடுப்பூசி போடப்பட்ட இடத்தில் சிவத்தல், வீக்கம் அல்லது வலி
- தலைவலி
- சோர்வாக உணருதல்
- மூட்டு வலி மற்றும்/அல்லது தசை வலிகள்
- குளிர் மற்றும்/அல்லது காய்ச்சல்
- குமட்டல் மற்றும்/அல்லது வாந்தி

உங்களது பிள்ளைக்கு அதிக காய்ச்சல் (40°C க்கு மேல்) இருந்தால் அல்லது தடுப்பூசி போடப்பட்டதன் பின்னர் மூன்று நாட்களுக்கு மேல் பக்க விளைவுகள் நீடித்தால் மருத்துவக் கவனிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## மயோகார்டிற்றிஸ் (Myocarditis) மற்றும் பெரிகார்டிற்றிஸ் (Pericarditis)

கோவிட்19 தொற்று ஏற்பட்டதன் பின்னர், மயோகார்டிற்றிஸ் (Myocarditis) மற்றும் பெரிகார்டிற்றிஸ் (Pericarditis) (இருதய வீக்க வகைகள்) ஏற்படலாம் என்பதுடன், அவை மிகவும் ஆபத்தானவை. அரிதான சந்தர்ப்பங்களில், தடுப்பூசி பெற்றதன் பின்னர் இது ஏற்படக்கூடும் என்றாலும், அது மிதமானதுடன், வழமையில் சில நாட்களுக்குள் நன்றாகிவிடும். தடுப்பூசியைப் பெற்றபின் சில வாரங்களில் உங்களது பிள்ளைக்கு நெஞ்சு வலி, சுவாசக்குறைவு அல்லது அதிகரித்த இருதயத் துடிப்பு ஏற்பட்டால் மருத்துவக் கவனிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். எந்தவொரு அபாயத்தையும் விட நன்மைகள் அதிகமாக இருப்பதால் தடுப்பூசி இன்னமும் பரிந்துரைக்கப்படுகிறது

### தடுப்பூசியைப் பெறக் காத்திருக்கவும்

- காய்ச்சல் அல்லது எந்தவொரு கோவிட்-19 அறிகுறிகளைக் கொண்டுள்ள சிறுவர்கள் நன்றாக உணரும்வரை காத்திருக்க வேண்டும். கோவிட்-19 வந்த பிறகு எப்போது தடுப்பூசியைப் பெறலாம் என்பதை அறிந்துகொள்ளவும்.
- தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டிய சிறுவர்கள், அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் முடியும்வரை காத்திருக்க வேண்டும்.

## உங்களது பிள்ளைக்கு பின்வருவன இருந்தால் ஒரு மருத்துவ சேவை வழங்குனருடன் ஆலோசிக்கவும்:

- அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை பலவீனப்படுத்தும் மருந்துகளை எடுத்தல் – அவர்களின் மருந்துகளுக்கு ஏற்றவகையில் தடுப்பூசி போடும் நேரத்தை நீங்கள் தெரிவுசெய்ய விரும்பலாம்.
- முதலாவது கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்று நான்கு மணித்தியாலங்களின் பின்னர் ஒரு ஒவ்வாமை எதிர்வினை ஏற்பட்டது.
- தடுப்பூசியின் எந்தவொரு உள்ளீட்டுப் பொருளுக்கும் கடுமையான ஒவ்வாமை உள்ளது.
- மல்டிசிஸ்டம் இன்ஃப்ளமேட்டரி சிண்ட்ரோம் (Multisystem Inflammatory Syndrome) (MIS-C) ஏற்பட்டது.

## தடுப்பூசியைப் பெறுவதற்கான தகவலறிந்த ஒப்புதல்

5 முதல் 11 வயதான குழந்தை தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு பெற்றோர்/பாதுகாவலரின் ஒப்புதல் தேவை.

**மேலதிக விபரங்களுக்கு:** உங்கள் மருத்துவ சேவை வழங்குனருடன் பேசி, toronto.ca/COVID19 என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.